[2012 பிப்ரவரி 3

சுரண்டையில் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க அரசு ஆணையிடுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் உரிய நிலம் கிடைக்கப்பெறும்பட்சத்தில், ஆய்வு செய்யப்பட்டு, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

37—

கட்டட வசதி

*__2390__—**திரு. சி. மைக்கேல் ராயப்பன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திசையன்விளை முதன்மை ஆரம்ப சுகாதார நிலையத்தில் புறநோயாளிகள் பிரிவுக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில், திசையன்விளை பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட்டு, 30 படுக்கை வசதிகளுடன் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகச் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ரூ.6 இலட்சம் செலவில் புறநோயாளிகள் பிரிவுக்குக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுத்துவருகிறது. மேலும், தடுப்பூசி அறை கட்ட ரூ.3.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பொதுப் பணித் துறையின்மூலம் கட்டுமானப் பணிகள் நடைபெற உள்ளன என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2012 பிப்ரவரி 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் இருக்கையில் இல்லை.

உடுக்குறியிட்ட வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் தாமதமாக வந்தால் நான் என்ன செய்ய முடியும்?

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்*

(பட்டியல் 1)

1—

ஊதியம்

வினா எண் 287—திரு. எஸ்.பி. முத்துக்குமரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், வெள்ளாளவிடுதி எண்ணெய்வித்துப்பண்ணை, குடுமியான் மலை அறிஞர் அண்ணா பண்ணைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு நிலுவையில் உள்ள ஊதியத்தை வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

அண்ணா அரசு விதைப்பண்ணை, வெள்ளாளவிடுதி எண்ணெய்வித்துப்பண்ணை மற்றும் வேளாண்மைத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள இதர அரசு விதைப்பண்ணைகள் மற்றும் எண்ணெய்வித்துப்பண்ணைகள் ஆகியவற்றில் பணிபுரியும்

---

* இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS